**மாகாண கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்**

**க.பொ.த (உ/த) முன்னோடிப் பரீட்சை – *2021***

**Provincial Department of Education Northern Province**

**G.C.E (A/L) Pilot Examination**

| | | |
|---|---|---|
| *தரம் :- 13 (2021)* | தொடர்பாடலும் ஊடககற்கையும் **II** | மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |

**வினாத்தாள் கட்டமைப்பு**

**வினாத்தாள் II நேரம் *03* மணித்தியாலயங்கள் (மேலதிக வாசிப்பு நேரம் *10* நிமிடம்)**

இவ் வினாத்தாள் A,B என்ற இரண்டு (02) பகுதிகளைக் கொண்டது.

- **பகுதி A இலிருந்து இரண்டு (02) வினாக்களையும் பகுதி B இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும்.**
  - ✓ பகுதி A - இந்தப் பகுதி மூன்று (03) கட்டமைப்பு கட்டுரை வகை வினாக்களைக் கொண்டது. அவை *2008* **(பழைய)** மற்றும் *2018* **(புதிய)** பாடத்திட்டங்கள் இரண்டுக்கும் பொதுவான பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும்.
  - ✓ பகுதி B - இந்தப் பகுதி எட்டு (08) கட்டமைப்பு கட்டுரை வகை வினாக்களைக் கொண்டது. அதில் 4, 5, 6, 7 ஆகிய வினாக்கள் **பழைய** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும் 8, 9, 10, 11 ஆகிய வினாக்கள் **புதிய** பாடத்திடத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும்.

வினாத்தாள் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 05 x 40 = 200

**இறுதிப் புள்ளியைக் கணித்தல்** :

வினாத்தாள் I = 50

வினாத்தாள் II = 200 ÷ 4 = *50*

இறுதிப்புள்ளி = 100

## வினாப்பத்திரம் II

- ✓ **2008 (பழைய) மற்றும் 2018 (புதிய) பாடத்திட்டங்கள் இரண்டுக்கும் பொதுவான பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளிலிருந்து இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
- ✓ **இவ்வினாப்பத்திரம் பாடசாலைப்பரீட்சாத்திகளை கருத்தில் கொண்டு A.C ஆகிய பகுதிகளினை மாத்திரமே உள்ளடக்கியுள்ளது.**

### பகுதி A

*01.*

1) வாய்மொழித்தொடர்பாடலுக்குரிய பணிகள் **நான்கினைப்** பெயரிடுக. (4புள்ளிகள்)
2) ஆளிடைத்தொடர்பாடலின் பயன்கள் **நான்கினைப்** பெயரிட்டு அவற்றுள் **ஒன்றைப்** பற்றி சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)
3) ஒஸ்கூட் -ஷ்ரம் மாதிரியின் விசேட இயல்புகள் **மூன்றினை** விளக்குக (12 புள்ளிகள்)
4) வெகுசன ஊடகங்களின் பணிகள் **நான்கினை** அடிப்படையாக கொண்டு அவை தற்கால வெகுசன ஊடகத்தில் பயன்படுத்தப்படும் விதத்தினை உதாரணங்களுடன் விளக்குக (16 புள்ளிகள்)

*02.*

1) முறைசாராத் தொடர்பாடலின் **நான்கு** இயல்புகளை பெயரிடுக
2) பிரசித்த பயன்பாட்டின் இயல்புகள் **நான்கினை** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்று** பற்றி விபரிக்குக
3) நிறுவனமொன்றின் உள்ளக பொதுசனத்தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு பயன்படுத்தக்கூடிய கருவிகள் **மூன்றினை** விளக்குக
4) தொலைக்காட்சி ஊடகத்தின் படைப்பாக்க நிகழ்ச்சி வகைகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக

*03.*

1) வெகுசனத்தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிடுக
2) பாரம்பரிய ஊடக வழிமுறைகளில் சிறப்பிடம் பெறும் நாட்டார் கதைகளின் மூலம் சிறார்களுக்கு கல்வியறிவு புகட்டப்படுகின்றது. இக்கருத்தியலுக்கு வலுச்சேர்க்கும் **இரண்டு** அம்சங்களினை விபரிக்குக.
3) செய்திப்பத்திரிகை ஊடகத்தில் வன்முறை சித்தரிக்கப்படும் விதங்கள் **மூன்றினை** திறனாய்வின் அடிப்படையில் விளக்குக.
4) பொதுசனத்தொடர்பு செயற்பாட்டிற்காக சமூக ஊடகங்களினை பயன்படுத்தும் விதம் தொடர்பில் **நான்கு** சமூக ஊடகங்களை அடிப்படையாக கொண்டு ஆராய்க

## பகுதி C

*08.*

1) ஊடக ஒழுங்குமுறைப்படுத்தலினல் பயன்படும் அடிப்படை அணுகுமுறைகள் **நான்கினைப்** பெயரிடுக
2) ஊடக நிறுவனம் ஒன்றுக்கு தணிக்கை அவசியமானது இக்கூற்றுக்கு சாதகமான **இரண்டு** அம்சங்களையும் பாதகமான **இரண்டு** அம்சங்களையும் விபரிக்குக
3) ஒரு நபரின் ஊடக விளங்கறிவில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** தத்துவங்களையும் விளக்குக.
4) ஊடகத்தகவல் ஒன்றினை பகுப்பாய்வு செய்யும் போது அவசியம் கவனம் செலுத்தப்பட வேண்டிய **நான்கு** விடயங்கள் தொடர்பில் ஆராய்க.

*09.*

1) ஆய்வுச்செயற்பாடு ஒன்றில் தகவல் சேகரிப்பதற்கு பயன்படும் விதிமுறைகள் **நான்கினை** குறிப்பிடுக.
2) பூகோளமயமாதலின் போக்குகளுக்கு ஏற்ப தற்காலத்தில் தனி உலகப்பண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. பூகோளமயமாதலின் சாதக பாதக அம்சங்களினை **தலா இரண்டின்** அடிப்படையில் விளக்குக
3) அபிவிருத்திக்கான தொடர்பாடல் எதிர்பார்ப்புகள் **மூன்றினை** விமர்சன ரீதியாக கருத்துரைக்க
4) இலங்கையின் அபிவிருத்தி தொடர்பில் ஊடகங்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளையும் மனிதாபிமான தகவல்கள் வெளிக்கொணரவதில் சமூக ஊடகங்கள் ஆற்றும் பணிகளையும் ஆராய்க

*10.*

1) அபிவிருத்தி பற்றி கருத்துரைத்த **நான்கு** வேறுபட்ட அறிஞர்களின் வரைவிலக்கணங்களை குறிப்பிடுக
2) நிகழ்வு ஒழுங்குபடுத்தலில் திட்டமிடல் அவசியமானது அதன் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் **நான்கு** குறிப்பிட்டு **ஒன்றினை** விளக்குக.
3) ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளை வெளிக்கொணர்வதில் ஊடக அதிகாரியின் பங்கு அளப்பரியது இக்கூற்றினை ஆராய்க.
4) நீர் இனங்காணும் பொதுசனத்தொடர்பு சந்தர்ப்பங்கள் **நான்கினை** விளக்குக

*11.*

1) மார்க்சியத்திறனாய்வு என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது
2) பெறுநர் ஒருவர் ஊடக விளங்களிவை கொண்டிக்க வேண்டியதன் **நான்கு** முக்கியத்துவத்தினை குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்று** பற்றி விபரிக்குக
3) ஊடக தணிக்கையுடன் தொடர்புடைய இலங்கை நிறுவனங்கள் **நான்கினை** பெயரிட்டு அவற்றுள் **இரண்டினை** விபரிக்குக
4) வெகுசன ஊடகங்களில் காலத்துக்கு காலம் நிகழும் வன்முறைகள் பற்றிய பெறுநரது மனப்பாங்கை வினவும் ஆய்வொன்றில் பயன்படுத்தக்கூடிய தரவுகளை திரட்டும் முறைகளினை உதாரணங்களுடன் விளக்குக.